2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதனைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

350—

WORKING HOURS

***14982—DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS:**

Will the Hon. the Minister for Food be pleased to state:—

Whether the Government will take steps to extend the working time of Fair Price Shops upto 6-00 p.m.?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னையைப் பொறுத்தவரை முற்பகல் 8-30 மணி முதல் பிற்பகல் 12-30 மணி வரையிலும், பிற்பகல் 3-00 மணி முதல் 7-00 மணி வரையிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை முற்பகல் 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரையிலும், பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 6-00 மணி வரையிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் நியாய விலைக் கடைகள் மாலை 6-00 மணி வரை செயல்பட்டு வருவதால், நியாய விலைக் கடைகளின் பணி நேரத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட வேலை நேரப்படி அங்காடிகளைத் திறந்து வைத்து பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என்பதனையும், வேலை நேரங்களில்

அங்காடிகள் மூடியிருந்தால் ஊழியர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், கண்காணிப்பு அலுவலர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.*

DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker Sir and beloved Amma, the answer to my question has already been put into force. I express my thanks to the Hon'ble Speaker, to my beloved Amma and the Honourable Minister for Food for the extension of working time in Fair Price Shops which is of great help especially to the working women and teachers in particular. *நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

கூடுதல் பேருந்து

41080*—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குக் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு அரசுப்